بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**ஜுமுஆ பேருரை**

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் – அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக) அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 14.11.2014 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

Summary of the Friday Sermon - 14, Nov 2014 (Tamil)

# ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் முத்தான கூற்றுகள் அடங்கிய சம்பவங்கள்

தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:-

இன்றும் நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கையின் பல்வேறு பகுதிகளை ஒளியிட்டுக் காட்டக்கூடிய மேலும் அதே போல் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் வாழ்க்கையின் சில சிறப்பு அம்சங்களை வெளிப்படுத்தும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறிய ஒரு சில சம்பவங்களை எடுத்துக் கூறுவேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தன்னைப் பற்றி கூறுகின்றார்கள். அதாவது நான் அறிவுப்பூர்வமாக கூறுகிறேன். ஹஸ்ரத் சாஹிப் அவர்களை அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை தந்தை என்ற காரணத்தினால் ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக, எப்போது என்னுடைய வயது ஏறக்குறைய 11 ஆக இருந்ததோ அப்போது என்னுடைய ஆராய்ச்சியில் அன்னார் நவூதுபில்லாஹ் பொய்யராக இருந்தால் நான் வீட்டிலிருந்து வெளியேறி விடுவேன் என்று உறுதியான முடிவு எடுத்தேன். ஆனால் நான் அன்னாருடைய உண்மைத்துவத்தைப் புரிந்தேன். மேலும் என்னுடைய ஈமானும் அதிகமானது. எதுவரை என்றால் அன்னார் மரணமடைந்த போது என்னுடைய நம்பிக்கை மேலும் உறுதியானது. பிறகு அன்னார் கூறினார்கள். எப்போது நான் என்னுடைய 10 வது வயதில் அன்னாருடைய கையில் பைஅத் செய்தேனோ என்னுடைய உணர்வின் நதியில் எப்படிப்பட்ட ஓர் துடிப்பு ஏற்பட்டதென்றால் அதை கூற இயலாது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எவ்வாறு துஆக்களின் பக்கம் ஆர்வமூட்டி வந்தார்கள், சிறு வயதிலேயே துஆக்களின் பக்கம் கவனமூட்டி வந்தார்கள், Encourage செய்து வந்தார்கள் என்பது தொடர்பாக ஓரிடத்தில் கூறுகிறார்கள்.

உஜீபு குல்லு துஆயிக இல்லா ஃபீ ஷுரகாயிக அதாவது உன்னுடைய நெருக்கமானவர்கள் தொடர்பானவைத் தவிர மற்ற அனைத்து துஆக்களையும் ஏற்றுக் கொள்வேன் என்று அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தும் அன்னார் ஹென்ரி மார்ட்டின் கிலார்க்கின் வழக்கின் சந்தர்ப்பத்தில் 9 வயதை அடைந்த என்னிடம் துஆவிற்காக கூறுகிறார்கள். அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அன்னாருக்கு 9 வயதாக இருந்த போது துஆ செய்யுமாறு கேட்டுக் கொண்டார்கள். வீட்டின் பணியாற்றக்கூடிய ஆண்களிடமும், பெண்களிடமும் துஆ செய்யுமாறு கூறுகிறார்கள்.

ஆக, எப்போது இறைவன் அவருடைய அனைத்து துஆக்களையும் ஏற்றுக் கொள்வேன் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கக் கூடியவர் பிறரிடம் துஆவிற்காக வேண்டுவதை அவசியம் என்று கருதுகின்றார் என்றால் மற்றவர்கள் எந்த அளவிற்கு இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். இந்த இல்ஹாம் அதாவது உஜீபு குல்லு துஆயிக இல்லா ஃபீ ஷுரகாயிக பற்றி ஒரு சிலருக்கு தெரியாமல் இருக்கலாம். இது ஒரு வழக்கு தொடர்பாக அன்னார் துஆ செய்து கொண்டிருந்தார்கள். அன்னாருடைய ஒரு சில நெருக்கமானவர்கள் வழக்கு

தொடுத்திருந்தார்கள். அதற்கு அன்னார் தன்னார் தன்னுடைய குடும்பத்தினரிடம் தேவையில்லாமல் இந்த வழக்கில் வழக்கறிஞர்களுக்காக பணத்தை வீணாக்க வேண்டாம். வழக்கில் தோல்வியடைந்து விடுவீர்கள் என்று கூறினார்கள். எவ்வாறிருப்பினும் கீழ்கோர்ட்டில் வழக்கினுடைய தீர்ப்பு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சகோதரருக்கு சாதகமாக இருந்தது. பிறகு மீண்டும் மேல் முறையீடு செய்யப்பட்டது. Cheif Court ல் இந்த வழக்கில் தோல்வியடைந்து விட்டார்கள். அல்லாஹ் தெளிவான முறையில் கூறியிருக்கும் போது இந்த வழக்கில் நீங்கள் எவ்வாறு வெற்றி பெற்றிருக்க முடியும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்.

சுவரினுடைய ஒரு வழக்கு மிகவும் பிரபல்யமான ஒரு வழக்காகும். இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய காலத்தில் நடந்தது. அன்னாருடைய குடும்பத்தினரில் எதிரிகள் பள்ளிக்கு செல்லக்கூடிய வழியில் சுவரை எழுப்பி வழியை அடைத்து விட்டார்கள். ஒரு சில அஹ்மதிகள் உணர்ச்சிவசப்பட்டு சுவரை தகர்க்க விரும்பினார்கள். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமது பணி பொறுமையை மேற்கொள்வதும், சட்டத்தைப் பேணுவதுமாகும் என்று கூறினார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்.

நான் கனவில் சுவர் தகர்க்கப்படுவதாகவும், மக்கள் ஒவ்வொரு செங்கலாக எடுத்து வீசவும் கண்டேன். மேலும் அதற்கு முன்பு சற்று மழை பெய்திருப்பது போன்றும் தெரிகின்றது. அதே நிலைமையில் கனவிலேயே பள்ளிவாசல் பக்கத்திலிருந்து ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் வருவதாகவும் கண்டேன். அன்னார் கூறுகிறார்கள். வழக்கினுடைய தீர்ப்பு வந்த போது சுவர் உடைக்கப்பட்டது. கனவில் கண்டது போன்றே நடந்தது. இந்த கனவைப் பற்றி அன்னார் ஏற்கனவே முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடம் கூறியிருந்தார்கள். எனவே முதல் கலீஃபத்துல் மஸீஹ் என்னைக் கண்டதும் மியான் பாருங்கள். இன்று உங்களுடைய கனவு பூர்த்தியாகி விட்டது என்று கூறினார்கள். குழந்தைகளை மகிழ்விப்பது தொடர்பாக ஓரிடத்தில் தன்னுடைய சம்பவத்தை கூறியவாறு கூறுகின்றார்கள்.

எனக்கு என்னுடைய குழந்தைப் பருவத்தின் ஒரு விஷயம் நினைவிருக்கின்றது. அதாவது எங்களுடைய தாயார் சில சமயம் கோபமடைந்தவாறு இவருடைய தலை (அதாவது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ்) மிகவும் சிறியதாக இருக்கிறது என்று கூறுவார்கள். எனக்கு நினைவிருக்கிறது. அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இது ஒன்றும் பெரிய விஷயமல்ல. நமக்கு வேண்டியதெல்லாம் நாம் அல்லாஹ் மற்றும் ரஸூலின் கட்டளைகளைப் புரிய வேண்டும். அவற்றை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவனுடைய இருப்பை புரிய முயற்சி செய்ய வேண்டும். திருக்குர்ஆனைப் புரிய வேண்டும். இதுவே உண்மையாகும். இதன் மூலமாகவே மூளை ஒளிபெறுகின்றன. அரசாங்கத்தோடு விசுவாசம் தொடர்பாக அன்னார் ஓரிடத்தில் கூறுகிறார்கள்.

நான் சிறுவனாக இருந்த போது மேலும் நான் எனக்கு புரியும் திறன் இல்லாத காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நாவிலிருந்து அரசாங்கத்தோடு விசுவாசத்துடன் இருக்க வேண்டும் என்ற கட்டளையை நான் கேட்டேன். அந்த கட்டளையை நான் எந்த அளவுக்கு பேணி நடந்தேன் என்றால் நான் என்னுடைய நெருக்கமான நண்பர்களிடம் கூட இது தொடர்பாக கருத்து வேறுபாடு கொண்டேன். அன்னார் ஆங்கிலேயர்களால் நடப்பட்ட செடி என்று ஆட்சேபனை செய்கின்றார்கள். கூறினார்கள். அவர்கள் சுதந்திரம் வழங்கியதன் காரணத்தினாலேயே கருணையாகவும் அந்த சமுதாயத்தைப் புகழவும் செய்தார்கள். பேணாகைக் கொண்டு செய்யப்படும் ஜிஹாது தொடர்பாக அன்னார் ஓரிடத்தில் கூறினார்கள்.

நபிமார்களின் இதயம் மிகவும் நன்றியுணர்வு கொண்டதாக இருக்கின்றது. ஒரு சிறிய விஷயத்திலும் கூட பிறருடைய பேருபகாரத்தை உணர்கின்றனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் புத்தகங்கள் இரவு பகலாக அச்சிடப்பட்டு வந்த நேரத்தில் அன்னார் பல இரவுகள் தூங்கவேயில்லை. கூறுகிறார்கள். நான் பல முறை அன்னார் பணி செய்து கொண்டிருக்கும் போது தூங்கினேன். ஆனால் எப்போதெல்லாம் என் கண் திறக்குமோ அன்னாரை பணி செய்யவே கண்டேன். எதுவரை என்றால் காலை விடிந்து விட்டது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபாக்கள் அன்னாரோடு கண்ணியமான முறையில் நடந்து கொள்ளுதல் மற்றும் அன்னாருடைய அந்தஸ்தை எந்த அளவிற்கு கருத்தில் கொண்டிருந்தார்கள் என்றால் அதற்கு எதிராக எதையும் சகித்துக் கொள்ளவில்லை. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தன்னுடைய ஒரு சம்பவத்தை கூறியவாறு நமது இளைஞர்கள் இஸ்லாத்தினுடைய ஒழுக்கம் மற்றும் நன்னடத்தைகளை நினைவில் கொள்ள வேண்டும் என்று கவனமூட்டியுள்ளார்கள். அன்னார் கூறுகின்றார்கள். அன்னார் தன்னுடைய ஒரு குத்பாவில் கூறுகிறார்கள். இளைஞர்கள் எவ்வித தயக்கமுமின்றி ஒருவர் பிறருடைய கழுத்தில் கையை போட்டு சுத்துகின்றனர். ஒரு சிலர் சிறு வயதில் எனக்கு வழங்கிய தர்பிய்யத்தின் தாக்கம் இன்று வரை உள்ளது. எப்பொழுது அந்த சம்பவம் நினைவிற்கு வருகின்றதோ என்னையும் அறியாமலேயே அவர்களுக்காக உள்ளத்தில் துஆ எழுகின்றது. ஒரு முறை நான் ஒரு சிறுவனின் தோலில் என்டைய கை முட்டியை தாங்கலாக வைத்து நின்று கொண்டிருந்தேன். மவ்லவி அப்துர் ரஹீம் சாஹிப் தர்த் அவர்களுடைய தந்தை மாஸ்டர் காதிர் பக்ஸ் சாஹிப் அவர்கள் இதைத் தடுத்தவாறு இது மிகவும் தவறான விஷயம் என்று கூறினார்கள். அப்போது எனக்கு ஏறக்குறைய 13 இருக்கும். ஆனால் அந்த காட்சி எப்பொழுதெல்லாம் என்முன் வருகின்றதோ அவர்களுக்காக என் உள்ளத்தில் இருந்து துஆ எழுகின்றது. இதே போல் முராதாபாதைச் சார்ந்த சூபேதார் சாஹிபினுடைய ஒரு விஷயமும் எனக்கு நியாபகம் இருக்கின்றது. குர்தாஸ்பூரில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது. நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பேசிக் கொண்டிருந்த போது அன்னாரைப் பார்த்து தும் அதாவது நீங்கள் என்று கூறி விட்டேன். அந்த சூபேதார் சாஹிப் என்னை தனியாக அழைத்துச் சென்று நீங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மகனாவீர்கள். எங்களைப் பொறுத்தவரையில் தாங்கள் மிகவும் கண்ணியத்திற்குரியவர்கள். ஆனால் இந்த விஷயத்தையும் நினைவில் கொள்ளுங்கள். அதாவது தும் நீங்கள் என்ற வார்த்தை சம வயதை உடையவர்களுக்கு கூறப்படுகின்றது. பெரியவர்களுக்கு அல்ல. மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இந்த வார்த்தையைப் பயன்படுத்துவதை ஒருபோதும் சகித்துக் கொள்ள முடியாது. இது தொடர்பாக அன்னார் வழங்கியது எனக்கு முதல் பாடமாகும்.

எனவே இஸ்லாமிய நடைமுறையில் நாமும் குறிப்பான கவனம் செலுத்த வேண்டும். இன்னொரு சம்பவம் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். நாங்களும் சிறு வயதில் பல்வேறு வகையான விளையாட்டுகள் விளையாடி வந்தோம். நான் பொதுவாக கால்பந்து விளையாடி வந்தேன். காதியானில் ஒரு சில கிரிக்கெட் வீரர்கள் வந்து ஒரு கிரிக்கெட் அணியை உருவாக்கினார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். அவர்கள் ஒரு நாள் என்னிடம் வந்து, ஹஸ்ரத் சாஹிபிடம் சென்று அவர்களும் விளையாட வருமாறு கூறுங்கள் என்று கூறினார்கள். ஆக, நான் உள்ளே சென்றேன். அப்போது அன்னார் ஒரு புத்தகம் எழுதிக் கொண்டிருந்தார்கள். நான் எனது நோக்கத்தைக் கூறிய போது தன்னுடைய பேணாவை கீழே வைத்து விட்டு உன்னுடைய பந்து இந்த மைதானத்தை விட்டு வெளியே செல்லாது. ஆனால் நான் எப்படிப்பட்ட கிரிக்கெட் விளையாடுகின்றேன் என்றால் அதன் பந்து உலகின் எல்லை வரை சென்றடையும். இப்போது பாருங்கள். அன்னாருடைய பந்து உலகின் எல்லை வரை சென்றடைந்ததா ? இல்லையா ? ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காதியானிலிருந்து கொண்டு அடித்த அந்த பந்து உலகின் எல்லை வரை சென்றடைந்து கொண்டிருக்கிறது. பிறகு இன்னொரு சம்பவத்தைக் கூறியவாறு அன்னார் கூறுகின்றார்கள். மார்க்க அல்லது உலக உழைப்பு இல்லாத வரை எந்த மனிதனும் கண்ணியத்தைப் பெற முடியாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறி வந்தார்கள். அதாவது நம்முடைய காலத்தில் அனைத்து கண்ணித்தையும் அல்லாஹ் நம்மைச் சார்ந்ததாக ஆக்கிவிட்டான். இந்த காலம் அதாவது மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்த காலத்தில் அனைத்து கண்ணியமும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் தொடர்புடையதாக ஆகிவிட்டது. ஆக, ஏதேனும் ஒரு மார்க்கம் பலனடைய விரும்புகின்றதென்றால் தம்மை இறைவனுக்கு முன்பாக முற்றிலுமாக வைத்து விடுவதே இதற்கான வழியாகும். ஆனால் ஒவ்வொரு சமுதாயமும் இவ்வாறு செய்தால் அதன் மீது அவர்களுக்கு குறிப்பான அருள் இருக்கும். அவர்கள் எல்லா மைதானத்திலும் வெற்றி பெறுவார்கள். நமது ஜமாஅத்தும் இந்த அடியை எடுத்து

வைப்பது அவசியமாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பைஅத்தில் வந்த பிறகு நாம் பிறரை விட மாறுபட்டு தென்பட வேண்டும். இறைவன் மீது ஈமான் மற்றும் நம்பிக்கையிலும் நாம் பிறரை விட மாறுபட்டவர்களாக தென்பட வேண்டும். மேலும் அதில் முன்னேறியவர்களாக இருக்க வேண்டும். இறை வணக்கங்களிலும் பிறரை விட மாறுபட்டவர்களாக தென்பட வேண்டும். உயர் தரத்தை பெற முயற்சி செய்வதிலும் மற்றவர்களை விட அதிகமாக இருக்க வேண்டும். உயர் நல்லொழுக்கத்திலும் ஒரு தனிப்பட்ட இடத்தைப் பெற வேண்டும். சட்டத்தைப் பேணுவதிலும் நாம் ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டும். சுருக்கமாக, எல்லா விதத்திலும் ஓர் அஹ்மதி மற்றவர்களை விட மாறுபட்டவர்களாக இருக்க வேண்டிய தேவை உள்ளது. அப்போது தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று நாம் பைஅத்திலிருந்து சரியான முறையில் பயன் பெற முடியும்.

இன்னொரு சம்பவத்தைக் கூறுகிறார்கள். கருணை மற்றும் நன்னடத்தை தொடர்பானது. ஒரு முறை ஒரு அரசாங்க அதிகாரி காதியான் வந்தார். அவர் அன்னாரிடம் இவர்கள் உங்களுடைய நகரத்தைச் சார்ந்தவர்கள். எனவே நீங்கள் இவர்களோடு மென்மையான முறையில் நடந்து கொள்ளுங்கள் என்று கூறினார். அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த புட்டே ஷா அவர்களிடமே கேளுங்கள். அவருக்கு எனக்கு இழப்பு ஏற்படுத்தக் கூடிய ஏதேனும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்து அதை அவர் விட்டிருக்கிறாரா ? மேலும் அவருக்கு நல்லது செய்யக்கூடிய ஏதேனும் ஒரு வாய்ப்பு எனக்கு கிடைத்து நான் அவருக்கு நல்லது செய்யாமல் இருந்திருக்கிறேனா ? அப்போது அவர் தன்னுடைய தலையை தொங்கவிட்டவாறு ஏதும் பேசாமல் அமர்ந்திருந்தார். இது அன்னாருடைய நல்லொழுக்கத்தின் ஒரு மாபெரும் முன்மாதிரியாகும். எனவே நம்முடைய ஜமாஅத்தும் நல்லொழுக்கத்தில் ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டும். விவகாரங்களில் எந்த அளவிற்கு தூய்மை இருக்க வேண்டும் என்றால் வீட்டில் ஒரு பைசா கூட இல்லாமல் இருந்தாலும் நம்பி ஒப்படைக்கப்பட்டவற்றில் கை வைக்கக் கூடாது. மேலும் எந்த அளவுக்கு இனிமையாக பேச வேண்டும். எப்படி அன்பான முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்றால் அது மற்றவர்களது உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நாவிலிருந்து நான் இந்த கருத்தை என்னுடைய காதுகளால் பல முறை கேட்டுள்ளேன். அதாவது அல்லாஹ்வின் தரப்பிலிருந்து இரு விதமான சோதனைகள் வருகின்றன. ஒரு வகையான சோதனை எப்படிப்பட்டதென்றால் அதில் மனிதன் தன்னுடைய வசதிக்காக ஏதேனும் ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள அவருக்கு அனுமதி இருக்கின்றது. இதன் உதாரணமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறி வந்தார்கள். பாருங்கள். குளிர் காலங்களில் உளூ செய்வது ஒரு சோதனையாகும். குளிர் காலங்களில் கடுமையான குளிர் அடிக்கும் போது குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருக்கும். அது சற்று பட்டால் கூட மனிதனுக்கு கஷ்டம் ஏற்படும். இரண்டாவது சோதனைப் பற்றி அன்னார் எதுவும் கூறவில்லை. இருப்பினும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஒரு மேற்கோளைப் படித்து விடுகின்றேன். இதில் அன்னார் சோதனைகளில் என்ன நுட்பமான ஞானம் இருக்கிறது என்று கூறியுள்ளார்கள். அன்னார் கூறினார்கள். பாருங்கள். அல்லாஹ் தன்னுடைய அடியாருக்கு எவ்வித கஷ்டமும் கொடுக்காமல் எல்லாவிதமான வசதி வாய்ப்புகளோடு அவனை வாழ வைக்கும் ஆற்றல் பெற்றவனாக இருக்கின்றான். அவர்களுடைய வாழ்க்கை ஒரு ராஜ வாழ்க்கையாக இருந்திருக்கலாம். எப்பொழுதும் அவர்களுக்கு சந்தோஷத்திற்குரிய பொருள்கள் கிடைத்திருக்கலாம். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. இதில் மிகப் பெரிய ரகசியம் உள்ளது. பாருங்கள்.பெற்றோர்களுக்கு தன்னுடைய மகள் எந்த அளவிற்கு அன்பிற்குரியவளாக இருக்கின்றாள். மாறாக, ஆண் பிள்ளைகளை விட பெண்கள் அதிக நேசத்திற்குரியதாக இருக்கின்றது. ஆனால் எப்படிப்பட்ட ஒரு நேரம் வருகின்றதென்றால் பொற்றோர்கள் அதை தன்னை விட்டு பிரித்து விடுகின்றனர். அது எப்படிப்பட்ட நேரமாக இருக்கின்றதென்றால் அந்த நேரத்தை காண்பது தைரிய இதயம் கொண்டவரால் தான் முடியும். இரு தரப்பின் நிலைமையும் கருணைக்குரியதாக இருக்கின்றது. (அதாவது தாய் தந்தையரும் பிரியும் போது அழுகின்றனர். மகளும் அழுகின்றாள்.) ஏறக்குறைய 14, 15 வருடங்கள் ஓரிடத்தில் இருக்கின்றனர். இறுதியில் அவர்கள் பிரிந்து செல்லுக்கூடிய நேரம் மிகவும் உருக்கமான நேரமாக இருக்கின்றது. ஆனால் அந்த பிரிவையும் கூட அறிவீனன் கருணையற்றதாக கூறி விடலாம். ஆனால் அந்த

மகளிடம் எப்படிப்பட்ட ஆற்றல்கள் இருக்கின்றதென்றால் அதன் வெளிப்பாடு பிரிந்து செல்லுதல் மற்றும் கணவனின் வீட்டிற்கு சென்று கணவனோடு வாழ்வதின் விளைவாக இருக்கின்றது. அது இரு தரப்பினர்களுக்கும் அருளுக்குரியதாக இருக்கின்றது. அல்லாஹ்வைச் சார்ந்தவர்களது நிலைமையும் இதே போன்று தான். அவர்களில் ஒரு சில பண்புகள் மறைமுகமாக இருக்கின்றன. எதுவரை அவர்களுக்கு கஷ்டங்களும், கடினங்களும் வருவதில்லையோ அதுவரை அவைகள் வெளிப்படுவதில்லை. இறைவனுக்கு நெருக்கமாக ஆவதற்கு துக்கத்தை சகித்துக் கொள்வதும், நன்றி செலுத்துவதும், புதிய நாள் மற்றும் புதிய மரணத்தை தன்மீது போட்டுக் கொள்வதும் அவசியமாகும். எப்பொழுது மனிதன் உலக சிந்தனை மற்றும் ஆன்மாவிலிருந்து முற்றிலுமாக தன்மீது ஒரு மரணத்தை ஏற்படுத்துவாரோ அப்போது அவருக்கு எப்பொழுதும் அழியாத ஒரு வாழ்க்கை கிடைக்கின்றது. அதன் பிறகு மரணமே கிடையாது.

ஆக, இதுவே சோதனை பற்றிய ஞானத்தின் சுருக்கமாகும். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் ஒரு முறை கூறினார்கள். எனக்கு 9 அல்லது 10 வயது இருக்கும் போது நானும் இன்னொரு மாணவனும் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்தோம். அங்கு அலமாரியில் ஒரு புத்தகம் இருந்தது. அந்த புத்தகத்தை திறந்த போது அதில் இப்போது ஜிப்ராயீல் இறங்குவதில்லை என்று எழுதப்பட்டிருந்தது. நான் இது தவறாகும். என்னுடைய தந்தையின் மீது இறங்குகிறது என்று கூறினேன். அந்த சிறுவன் புத்தகத்தில் ஜிப்ராயீல் இறங்க மாட்டார் என்று உள்ளது என்று கூறினான். எங்களுக்கிடையில் விவதாம் ஏற்பட்டது. இறுதியில் நாங்கள் இருவரும் ஹஸ்ரத் சாஹிபிடம் சென்று இருவரும் தத்தமது கருத்தை எடுத்துக் கூறினோம். அதற்கு அன்னார் புத்தகத்தில் தவறாக எழுதப்பட்டுள்ளது. ஜிப்ராயீல் இப்பொழுதும் வருகிறார்கள் என்று கூறினார்கள். பிறகு தன்னுடைய இன்னொரு சம்பவத்தைக் கூறினார்கள். பலமுறை இந்த சம்பவத்தை நினைத்து நான் சிரித்தும் உள்ளேன். மேலும் சில சமயங்களில் என்னுடைய கண்களில் கண்ணீரும் வந்துள்ளது. ஆனால் அதை நான் மிகவும் கண்ணித்தோடு பார்க்கின்றேன். அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் காலத்தில் ஓர் இரவில் நாங்கள் முற்றத்தில் தூங்கிக் கொண்டிருந்தேன். கோடை காலமாக இருந்தது. வானத்தில் மேகமூட்டம் வந்தது. மேலும் சப்தத்தோடு இடி இடித்தது. அப்போது முற்றத்தில் தூங்கிக் கொண்டிருந்த நாங்கள் எழுந்து வீட்டிற்குள் சென்று விட்டோம். அந்த காட்சி இன்றும் எனக்கு நினைவிருக்கிறது. அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் உள்ளே சென்ற போது நான் எனது இரு கைகளையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய தலையில் இடி விழுந்து விடக்கூடாது என்பதற்காக அன்னாருடைய தலைக்கு மேல் வைத்தேன். எனக்கு அறிவு தெரிந்த பிறகு என்னுடைய இந்த செயலின் மீது சிரிப்பு வந்தது. அதாவது எங்களால் அன்னார் பாதுகாப்பாக இருக்க வேண்டியதில்லை. மாறாக, அன்னாரின் மூலமாகத் தான் நாங்கள் இடியிலிருந்து தப்பிக்க வேண்டியிருந்தது.

ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்களின் மரணத்தின் சம்பவத்தைக் கூறுகிறார்கள். அதாவது 1905 ஆம் ஆண்டு ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் நோய்வாய்ப்பட்டார்கள். அன்னாருடைய மரணச் செய்தி கேட்ட போது அதைப் தாங்கிக் கொள்ளக் கூடிய சக்தி எனக்கில்லை. ஓடிச் சென்று என்னுடைய அறையில் நுழைந்து கதவை மூடிக் கொண்டேன். பிறகு ஒரு உயிரற்ற சடலத்தைப் போன்று கட்டிலில் விழுந்தேன். என்னுடைய கண்களிலிருந்து தண்ணீர் வர ஆரம்பித்தது. பிறகு 1908 ஆம் வருடத்தைப் பற்றி அன்னார் கூறுகின்றார்கள். அது எனக்கு மிகவும் கஷ்டத்திற்குரியதாகும். அனைத்து அஹ்மதியின் வாழ்க்கையிலும் ஒரு புதிய அத்தியாயம் தொடங்குவதற்கு ஒரு காரணமாக இருந்தது. அந்த வருடம் நம்மளுடைய உடலுக்கு உயிராக இருந்த, நம்முடைய ஒளியற்ற கண்களுக்கு பார்வையாக இருந்த, நம்முடைய இருளான உள்ளங்களுக்கு ஒளியாக இருந்த அந்த இருப்பு நம்மை விட்டுச் சென்றது. இது பிரிவல்ல. மாறாக, ஒரு கியாமத்தாக இருந்தது. கால்களுக்கு கீழ் பூமி விலகச் சென்றது. மேலும் வானம் தன்னுடைய இடத்திலிருந்து நகர்ந்து விட்டது. அல்லாஹ் சாட்சியாவான். அப்போது உணவினுடைய சிந்ததையும் இருக்கவில்லை. உடை பற்றிய சிந்தனையும் இருக்கவில்லை. முழு உலகமும் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களை விட்டுவிட்டாலும் நான் விடமாட்டேன். மேலும் இந்த ஜமாஅத்தை முழு உலகிலும் நிலைநாட்டுவேன் என்ற எண்ணம் மட்டுமே இருந்தது. நான் இந்த உடன்படிக்கையை எந்த

அளவிற்கு நிறைவேற்றினேன் என்று எனக்கு தெரியாது. ஆனால் என்னுடைய எண்ணம் எப்போதும் இந்த உடன்படிக்கைக்கு ஏற்ப என்னுடைய பணி இருக்க வேண்டும் என்றே இருந்தது. இன்று அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தில் ஒவ்வொருவரும் மாறாக, பின்னால் வரக்கூடியவர்கள் கூட அன்னார் இந்த உறுதிமொழியை சிறந்த முறையில் நிறைவேற்றினார்கள் என்பதற்கு சாட்சியாக இருக்கின்றார்கள். மாறாக, நமக்கு நம்முடைய உறுதி மொழியை நிறைவேற்றுவதற்கு சரியான வழிகளின் பக்கமும் அன்னார் வழிகாட்டியுள்ளார்கள். அல்லாஹ் நமக்கும் நம்முடைய உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கான தஃபீக்கை தந்தருள்வானாக.

இப்பொழுது நான் இரண்டு ஜனாஸா தொழுகைகள் தொழ வைப்பேன். ஒன்று ஜனாஸா ஹாஸிர் ஆகும். இது முல்தானைச் சார்ந்த மர்ஹூம் சவுத்திரி அப்துர் ரஹீம் சாஹிப் அவர்களுடைய மனைவி மதிப்பிற்குரிய சுரையா பேகம் சாஹிபா உடையதாகும். அன்னார் மான்செஸ்ட்டர் யூ.கே வில் இருந்து வந்தார்கள். 11 நவம்பர் அன்று தன்னுடை 77 வது வயதில் மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். நல்ல, தொழுகைகளை பேணக்கூடிய, சிறந்த ஒழுக்கமுடைய, பொறுமையுடைய, நன்றியுணர்வுடைய பெண்மணியாக இருந்தார்கள். மர்ஹூமா வஸிய்யத் செய்திருந்தார்கள். அல்லாஹ் அவர்களுடைய பதவியை உயர்த்துவானாக. மேலும் அவர்களது குழந்தைகளுக்கும் அவர்களின் நன்மைகளில் நிலைத்து நிற்கும் நல்வாய்ப்பினையும் வழங்குவானாக. இரண்டாவது ஜனாஸா காயிப் ஆகும். இது யமனைச் சார்ந்த மதிப்பிற்குரிய மஹ்மூத் அப்துல்லா ஷபூத்தி சாஹிபுடையதாகும். ஷபூத்தி சாஹிப் அவர்கள் 9 நவம்பர் 2014 அன்று நீண்ட நாள் நோய்வாய்ப்பட்டிருந்ததற்கு பின் வஃபாத்தானார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். 24 மே 1934 அன்று யமனில் பிறந்தார்கள். மர்ஹூமினுடைய தந்தையார் அன்னாரை ஜூன் 1952 ல் ஜாமிஆ அஹ்மதிய்யா ரப்வாவில் படிப்பதற்காக அனுப்பினார்கள். 1960 ல் முபல்லிக் ஆகி யமனுக்கு திரும்பி வந்தார்கள். தன்னுடைய உறவினர்களுடன் அது அஹ்மதியாக இருந்தாலும் சரி, அஹ்மதி அல்லாதவர்களாக இருந்தாலும் சரி கருணையுடன் நடந்து கொள்ளக்கூடியவர்களாக இருந்தார்கள். பின் விட்டுச் சென்றவர்களில் செய்யிதா நஸீம் ஷா சாஹிபா அவர்களைத் தவிர 5 மகன்களும், 12 பேரன் பேத்திகளும் அடங்குவர். இவர்களுடைய ஒரு மகன் கனடாவில் இருக்கின்றார்கள். மேலும் நாஸிர் அஹ்மது சாஹிப் இங்கு யூ.கே வில் தான் இருக்கின்றார்கள். அல்லாஹ் மர்ஹூமின் பதவியை உயர்த்துவானாக. மேலும் அவர்களின் பிள்ளைகளுக்கும் அன்னாரின் அடிச்சுவட்டை பின்பற்றி நடப்பதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 14.11.14
Summarized by Majlis Ansarullah Bharat
Tamil Translation : Moulavi. M.B. Tahir Ahmad
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516

***பிழை திருத்தம்***

கடந்த வார குத்பா (7.11.14) வின் முதல் பக்கத்தில் ஹுஸூர் அவர்கள் ஆரம்பத்தில் ஓதிய வசனம் சூரா நமலின் 63 வது வசனம் என்று தவறாக டைப் செய்யப்பட்டுள்ளது. ஆனால், அது சூரா ஆலி இம்ரானின் 93 வது வசனமாகும்.

அதே போல் 7 வது பக்கத்தில் கீழ் இருந்து 2 வரியில் தொகை அதிகமாகிறதா ? இல்லையா ? என்று பார்க்க வேண்டும் என்றும் தவறாக டைப் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அதை பார்க்க வேண்டாம் என்று திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகிறோம்.